You Are a God Full of Compassion and Mercy

Album 22 Song 5

KJC-DN

நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்

Song 5 நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்

Psalm 86 – David’s prayer for mercy. He appeals to God’s character: compassionate, gracious, slow to anger, abounding in love and faithfulness. He asks God to teach him His way and unite his heart to fear God’s name.

நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்
நீடிய பொறுமையும் சத்தியமுள்ள தெய்வம்
நீரே பூரண கிருபையுள்ள தேவன்
நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டிடும் தெய்வம்

என்மேல் நோக்கமாகி எனக்கு இரங்கும்
உமது வல்லமையை அடியானுக்கு அருளிடும்
உமது அடியாளின் குமாரனை இரட்சியும்
பகைஞர் வெட்கப்படும்படி அடையாளத்தைக் காண்பித்திடும்

KJC-DNN

நாள்தோறும் உம்மை நான் அழைக்கிறேன்
உம்மிடத்தில் என் ஆத்மாவை உயர்த்துகிறேன்
நானோ உம்மையே நம்பியுள்ளேன்
நான் சிறுமையும் எளிமையுமானேன்
என் விண்ணப்பத்தை கேட்டிடும்

நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்
நீடிய பொறுமையும் சத்தியமுள்ள தெய்வம்
நீரே பூரண கிருபையுள்ள தேவன்
நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டிடும் தெய்வம்

என்னுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும்
உம்மை நோக்கி கூப்பிடும் போது கேட்டருளும்
தேவர்களுக்குள்ளே உமக்கு யாரும் நிகரில்லை
உம்முடைய கிரியைகளுக்கு யாதும் ஒப்பில்லை

நீர் உண்டாக்கின எல்லா ஜனங்களும் - வந்து
உமது நாமத்தை மகிமைப்படுத்துவர்
நீரே அதிசயங்களை என்றைக்கும் செய்கிறவர்
நீர்தான் ஒருவரே உண்மையான தேவன்

நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்
நீடிய பொறுமையும் சத்தியமுள்ள தெய்வம்
நீரே பூரண கிருபையுள்ள தேவன்
நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டிடும் தெய்வம்

உமது வழியை எனக்கு போதியும் - நான்
உமது சத்தியத்தால் என்றும் நடந்திடுவேன்
உமது நாமத்திற்கு பயந்து இருக்கும்படி - என்
இருதயத்தை தேவன் நீரே ஒருமுகப்படுத்தும்

KJC-DNN

நீர் எனக்கு செய்த உமது கிருபை பெரியது
என் ஆத்துமாவை பாதாளத்திற்குத் தப்புவித்தீரே
என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதித்து
உமது நாமத்தை நான் மகிமைப்படுத்துவேன்

நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்
நீடிய பொறுமையும் சத்தியமுள்ள தெய்வம்
நீரே பூரண கிருபையுள்ள தேவன்
நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டிடும் தெய்வம்

